
பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்



0776906182


# தினப்புயல்

PIN news

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06


கலையரசி நகைமாடம்



T.P- 0774357193

## உள்ளூராட்சி சபைத் தேர்தல் - வெளியாகிய வர்த்தமானி




உள்ளூராட்சி சபைத் தேர்தலை 2023 ஆம் ஆண்டு மார்ச் 9 ஆம் திகதி நடத்துவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது.

இந்த ஆண்டு நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 80,720 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

வேட்பாளர்கள் 58 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் 329 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வாக்கெடுப்பு மார்ச் 9 ஆம் திகதி காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பரீட்சை திணைக்களத்தின் விசேட அறிவிப்பு

இலங்கைப் பரீட்சை திணைக்களம் 2022 சாதாரண தர பரீட்சை தொடர்பான விசேட அறிவித்தலை விடுத்துள்ளது. குறித்த பரீட்சைக்கான விண்ணப்பங்கள் இன்று(01) முதல் பெப்ரவரி 28 ஆம் திகதி வரை இணையத்தின் ஊடாக ஏற்றுக்கொள்ளப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கல்முனை மாநகர பிரதேசத்தினுள் பசுமைத் திட்ட முயற்சிகள் முன்னெடுப்பு



கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் விஜயம் செய்துள்ளார். குறித்த பொலிஸ் நிலையத்திற்கு நேற்று (31) சென்றிருந்த அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜயசிறி கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம்.எல்.புத்திக மேற்பார்வையில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ரம்ஷீன் பக்கீர் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட அப்பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் புதிய ஆண்டிற்கான அணிவகுப்பு மரியாதையும் பரிசோதனையும் கலந்து கொண்டு பார்வையிட்டு ஏற்றுக்கொண்டார்.

கல்முனை தலைமைய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி றம்சீன் பக்கீர் புத்திக இதனை தொடர்ந்து இவரை கௌரவிக்கும் வகையில் சேவையினை பாராட்டி நினைவு சின்னம் ஒன்றினை வழங்கி வைத்தார். கல்முனை மாநகர பிரதேசத்தை பசுமைத் திட்டங்களின் கீழ் உள்வாங்குவதன் அவசியம் மற்றும் பசுமை தரும் மரங்களை நடுவதன் ஊடாக மக்களுக்கான நன்மைகள் தொடர்பில் வலியுறுத்திய அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் இளைஞர் சேவை அதிகாரிகள் உட்பட இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைகளை பெற்று கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம்.எல்.புத்திக மேற்பார்வையில் இணைந்து மேற்குறித்த நிகழ்வின் முன்னாயத்த விடயங்களை ஆராய்ந்து பல்வேறு அறிவுறுத்தல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கினர்.

இப்பசுமைத் திட்டங்களின் கீழ் மாநகர சபை உள்ளிட்ட பல தரப்பினரை உள்வாங்கி பாதைகளின் நடுவில் மரங்களை நாட்டுதல் அவற்றை பேணுதல் ஆடு. மாடுகள் தீண்டுவதில் இருந்து பாதுகாத்தல் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன. இந்நிகழ்வில் கல்முனை பொலிஸ் நிலைய சிறு குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதான பொலிஸ் பரிசோதகருமான எம்.எல் றபீக் கல்முனை. குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக் கல்முனை பொலிஸ் நிலையத்தின் பிரதம பொலிஸ் பரிசோதகரும் சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியுமான ஏ.எல்.ஏ.வாஹிட். பொலிஸ் நிலை பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர் .

குறித்த கண்காணிப்பு விஜயத்தின் போது பொலிஸாரின் நிர்வாக சீரமைப்பு தொடர்பிலான முன்னெடுப்பு களப் பரிசோதனைகள் ஆகியவற்றுடன் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய சமூக சேவை பொலிஸ் பிரிவு. சுற்றுச்சூழல் பொலிஸ் பிரிவு. போக்குவரத்து பிரிவு சிறு குற்றத்தடுப்பு பிரிவு. பெருங் குற்றத்தடுப்பு பிரிவு. சிறுவர் பெண்கள் விசாரணைப் பிரிவு. உள்ளிட்ட பல பிரிவுகள் தொடர்பான குறை நிறைகள் ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## எமது இனத்திற்காகப் போராடும் தமிழரசுக்கு தமிழ் மக்களின் ஆணை வழங்கப்பட்டுள்ளது என்ற செய்தி 2023 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சொல்லப்படவேண்டும்



தமிழ் மக்களது பலம் மிக்க கட்சியை நாங்கள் பலப்படுத்தவில்லையென்றால் மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி விடும். 2023 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எமது இனத்தின் விடுதலைக்காகப் போராடுகின்ற இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு தமிழ் மக்களின் ஆணை வழங்கப்பட்டுள்ளது என்ற செய்தி சொல்லப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்துள்ளார்.

கல்முனையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், அம்பாறை மாவட்டத்திலே 2023ம் ஆண்டு நடைபெறப் போகும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சம்மந்தமாக பல களப் பணிகளை நாங்கள் முன்னெடுத்திருந்தோம். நாங்கள் ஒவ்வொரு பிரதேசங்களாச் சென்று வட்டாரக் கிளைகளை நடத்தியிருந்தோமே தவிர வேட்பாளர் தெரிவிலே கலந்துகொள்ளவில்லை. அந்த அந்த வட்டாரக் கிளைகளின் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களையே வேட்பாளர்களாக நியமித்திருக்கின்றோம்.

இன்று எமது கல்முனை மாநகரத்தின் இருப்பு என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது. நாளுக்கு நாள் பலமிழக்கப்படுகின்ற ஒரு இனமாகவே இருக்கின்றோம். அந்த அடிப்படையில் விரைவில் எமது மக்களுக்கு இனிமையான செய்தியை அறிவிப்போம். அதற்கான முழு முயற்சியைச் செய்து கொண்டிருக்கின்றோம். நாங்கள் மேற்கொள்கின்ற விடயங்களை விளம்பரப்படுத்த விரும்பவில்லை. எமது மக்களின் நீண்டகாலப் பிரச்சனையாக இருக்கின்ற விடயங்களுக்கு விரைவான தீர்வைப் பெற்றுக் கொள்ளக்கூடிய நடவடிக்கைகளில் நாங்கள் இறங்கியுள்ளோம்.

ஒரு உள்ளூராட்சி மன்றத்தின் வேட்பாளராக, உறுப்பினராக களமிறங்குபவர்கள் அந்த பிரதேசத்தின் அனைத்து செயற்பாடுகளிலும் முன்நிற்கும் குறிப்பாக அப்பிரதேசத்தின் தலைவராக இருந்து செயற்படும் தகைமை கொண்டவராக இருக்க வேண்டும். அவ்வாறு செயற்படுகின்ற போது தான் அந்தப் பிரதேசத்திலே சிறந்த சமூகக் கட்டமைப்பை உருவாக்க முடியும். ஆனால் எமது தமிழினத்தைப் பொருத்தமட்டில் எங்களுக்குள் பல தடைகள் இருக்கின்றன என்பதை மக்கள் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும். அந்த வகையிலே மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற உறுப்பினர்கள் அந்த அந்த வட்டாரங்களைக் கட்டிக் காக்கக்கூடிய, எமது பிரதேசங்களில் எமது சமூகம் முகங்கொடுக்கும் அடங்குமுறைகளைத் தட்டிக் கேட்கக் கூடிய திறன்மிக்கவர்களாக இருக்க வேண்டும்.

எமது மக்களும் கடந்த கால அரசியற் செயற்பாடுகளை உணர்ந்து நடக்க வேண்டும். தமிழ் மக்களது பலம் மிக்க கட்சியை நாங்கள் பலப்படுத்தவில்லையென்றால் மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி விடும். எமது கட்சி வடக்கில் இருந்து வரும் தீர்மானங்களையே நடைமுறைப்படுத்துவதான பிழையான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. அது முற்றுமுழுதாக பிழையான விமர்சனமாகும். எந்தச் சந்தர்ப்பத்திலும் எமது தலைமைகள் எங்களை விடுத்து தீர்மானங்களை எடுப்பதில்லை. ஒவ்வொரு பிரதேசங்களினதும் சூழ்நிலைகளை அறிந்து அப்பிரதேசத்தவர்கள் தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்று தான் சொல்லியிருக்கின்றார்கள். அதனைத் தவிர கட்டாயம் இவ்வாறு தான் நடக்க வேண்டும் என்ற ஆணையை அவர்கள் பிறப்பித்த வரலாறே இல்லை. எமது கட்சியைச் சிதைப்பதற்காக மாற்றுக் கட்சியினருடன் சேர்ந்து எமது கட்சியோடு பயணித்தவர்களும் தற்போது இந்தப் பொய்யான பிரச்சாரங்களை முன்னெடுத்து வருகின்றார்கள்.

நாங்கள் எமது உரிமை, இருப்பு சார்ந்த விடயங்களோடு பயணிக்க வேண்டிய கடப்பாடு இருக்கின்றது. கடந்த காலங்களில் 2008ம் ஆண்டு தமிழ்த் தேசியத்திற்கு எதிரானவர்களை தமிழர்கள் என்று சொல்லி மாகாணசபைக்கு அனுப்பி ஆழச் செய்தோம். அந்த நான்கு வருடங்களும் அவர்கள் சொல்லிக் காட்டும் அளவிற்கு எந்த வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்கவில்லை என்பதே நிதர்சனம். 2020இலும் தமிழ்த்தேசியத்திற்கு எதிரானவர்களுக்கு வாக்களித்து தமிழத் தேசியப் பிரதிநிதித்துவங்களை இல்லாமல் செய்தோம். தற்போதும் என்ன நடந்திருக்கின்றது. நாடும், நமது தேசமும் அதள பாதாளத்திற்குள் சென்றிருக்கின்றது.

தற்போது தமிழ்த் தேசிய எழுச்சி மக்கள் மத்தியிலே உருவெடுத்திருக்கின்றது. மட்டக்களப்பு மாவட்டத்திலே ஒரு உன்னதமான வளர்ச்சியை இந்தத் தேர்தல் சொல்லும். அதேபோன்று அம்பாறை மாவட்டமும் 2023 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாங்கள் எமது இனத்தின் விடுதலைக்காகப் போராடுகின்ற இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எமது ஆணையை வழங்கியிருக்கின்றோம் என்ற செய்தியைச் சொல்ல வேண்டும்.

தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்த கட்சிகள் பிரிந்து செயற்படுவதான பிரச்சாரங்களை முன்னெடுத்திருக்கின்றார்கள். நாங்கள் இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைமை காரணமாக ஒரு உத்தியைக் கையாண்டு தனித்தனியே கேட்கின்றோம். இந்தத் தேர்தல் முறைமையின் விளைவுகளை அனைத்து தரப்பினரும் சொல்லியிருக்கின்றார்கள். எனவே அந்த நிலைமைகளுக்கேற்பவே நாங்கள் கையாளுகின்றோமே தவிர எங்களை யாரும் பிரிக்கவும் இல்லை, நாங்கள் பிரியவும் இல்லை, பிரியப் போவதும் இல்லை.

அனைவருக்கும் தெரியும், இந்தத் தேர்தல் முறைமையில் சுயேட்சைக் குழுக்களில் கேட்டு மிகக் குறைந்த வாக்குகளைப் பெற்றவர்கள் கூட ஆசனங்களைப் பெற்ற வரலாறு இருக்கின்றது. அவ்வாறான சந்தர்ப்பங்களை நழுவ விட்டு விடக்கூடாது என்பதற்கான நடவடிக்கையே தவிர நிரந்தரப் பிரிவு அல்ல. எதிர்காலத்தில் நாங்கள் அதே ஒற்றுமையுடன் செயற்படுவோம் என்று தெரிவித்தார்.

## தாழமுக்கம் இன்று நண்பகல் இலங்கை கரையைக் கடக்கும் சாத்தியம்

தென்கிழக்கு மற்றும் அண்மையாகவுள்ள தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்ப ரப்புகளுக்கு மேலாக விருத்தியடைந்த தாழமுக்கம் தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளுக்கு மேலாக நேற்று வடஅகலாங்கு 8.40 N இற்கும் கிழக்கு நெடுங்கோடு 84.70 E இற்கும் அருகில் திருகோணமலைக்கு கிழக்காக 340 கிலோ மீற்றர் தூரத்தில் மையம்கொண்டுள்ளது.

அது மேற்குத் திசையில் நகர்ந்து அதன் பின் படிப்படியாக மேற்கு - தென்மேற்குத் திசைக்குத் திரும்பி 2023 பெப்ரவரி 1 ஆம் திகதி நண்பகல் வடஅகலாங்கு 70 N இற்கும் 80 N இற்கும் இடையில் இலங்கையின் கரையைக் கடக்கக் சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டி ன் பெரும்பாலான பிரதேசங்களில் மேகமூட்டமான வானம் காணப் படுவதுடன், அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் கிழக்குமாகாணங்களில் சில இடங்களில் 150 மி.மீ அளவான மிகப் பலத்த மழை விழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சில இடங்களில் 100 மி.மீக்கும் அதிகமான பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-60 கிலோ மீற்றர் வரையான வேகத்தில்பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் அவ்வப 'போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். (வளிமண்டலவியல் திணைக்களம்)

## இளைஞன் அடித்துக் கொலை - பொலிஸார் பதவி நீக்கம்

அமெரிக்காவில் கைது நடவடிக்கையின் போது பொலிஸார் நடத்திய தாக்குதலில் கருப்பின இளைஞர் உயிரிழந்தது தொடர்பாக 7 ஆவதாக ஒரு காவலர் இடைக்கால பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அந்த நாட்டின் டென்னஸீ மாகாணம், மெம்ஃபிஸ் நகரில் டய்ரி நிக்கல்ஸ் (29) என்பவர் ஜன.7 இல் காரை வேகமாக ஓட்டிச் சென்றதாகக் கூறி அவரை தடுத்து நிறுத்திய பொலிஸார் அவரை கடுமையாகத் தாக்கியதில் உயிரிழந்தார்.

இது தொடர்பாக ஏற்கெனவே 6 காவலர்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்ட நிலையில், தற்போது மேலும் ப்ரெஸ்டன் ஹெம்ஃபில் (படம்) என்ற காவலர் பணியிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளார். வழக்கில் குற்றமற்றவர்கள் என்று நிரூபிக்கப்படும் வரை அவர்கள் அனைவருக்கும் கட்டாய விடுப்பு அளிக்கப்பட்டுள்ளது.

## மன்மோகன் சிங்குக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது



இங்கிலாந்தில் ஒவ்வொரு ஆண்டும் தேசிய இந்திய மாணவர்கள் மற்றும் முன்னாள் மாணவர் சங்கம் மற்றும் இங்கிலாந்தின் சர்வதேச வர்த்தகத்துறை ஆகியவை இணைந்து இந்தியா -இங்கிலாந்து சாதனையாளர்களுக்கு விருதுகளை வழங்கி வருகிறது. இங்கிலாந்து பல்கலைக்கழகங்களில் படித்த இந்திய மாணவர்களின் சாதனைகளை கௌரவிக்கும் வகையில் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

அதோடு இருநாடுகளிலும் கல்வி, அரசியல், பொருளாதாரம் போன்ற பல துறைகளில் சிறப்பான பங்களிப்பு செய்வோருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதும் வழங்கப்படுகிறது. அந்த வகையில் இந்த ஆண்டு இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. பொருளாதாரம் மற்றும் அரசியல் வாழ்வில் ஆற்றிய பங்களிப்பிற்காக மன்மோகன் சிங்குக்கு இந்த உயரிய விருது வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் லண்டனில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் அறிவிக்கப்பட்ட இந்த விருது, தேசிய இந்திய மாணவர்கள் மற்றும் முன்னாள் மாணவர் சங்கத்தால் விரைவில் டெல்லியில் மன்மோகன் சிங்கிடம் ஒப்படைக்கப்படும் என கூறப்பட்டுள்ளது. இது குறித்து மன்மோகன் சிங் வெளியிட்ட அறிக்கையில், "நமது நாட்டின் எதிர்காலம் மற்றும் நமது இரு நாடுகளுக்கு இடையேயான உறவுகளின் கீழ் இளைஞர்களிடம் இருந்து வரும் அர்த்தமுள்ள இந்த விருதை பெறுவதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தியா - இங்கிலாந்து உறவு உண்மையில் நமது கல்விக் கூட்டாண்மை மூலம் வரையறுக்கப்படுகிறது. நமது தேசத்தை நிறுவிய மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர், சர்தார் படேல் மற்றும் பலர் இங்கிலாந்தில் படித்து, சிறந்த தலைவர்களாக மாறினர். பல ஆண்டுகளாக எண்ணற்ற இந்திய மாணவர்கள் இங்கிலாந்தில் படிக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்" என்று தெரிவித்துள்ளார்.

## "முக்கிய பொருளாதார சீர்திருத்தங்கள் - உலக வங்கியின் பூர்வாங்க நடவடிக்கைகள்" தொடர்பிலான மீளாய்வுக் கலந்துரையாடல்




"முக்கிய பொருளாதார சீர்திருத்தங்கள் - உலக வங்கியின் பூர்வாங்க நடவடிக்கைகள்" தொடர்பிலான மீளாய்வுக் கலந்துரையாடல் நேற்று (31) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவின் தலைமையில் இடம்பெற்றது.

உலக வங்கியின் உதவித் திட்டம் குறித்து இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், நிதி மேற்பார்வை மற்றும் கடன் முகாமைத்துவத்தை மேம்படுத்துதல், வரி நிர்வாகக் கொள்கையை மேம்படுத்துதல், இறையாண்மை நிதித் துறையில் ஏற்படும் படிப்படியான அபாயத்தைக் குறைத்தல், சமூகப் பாதுகாப்பு நிறுவனங்களின் விநியோகக் கட்டமைப்பு மற்றும் இலக்குகளை வலுப்படுத்துதல், கொள்கை நிச்சயமற்ற தன்மையைக் குறைத்தல் மற்றும் பொருளாதாரத்தின் போட்டித்தன்மையை அதிகரிப்பது போன்ற விடயங்கள் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய ஆரம்ப நடவடிக்கைகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இந்த ஆரம்பகட்ட நடவடிக்கைகளை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை சாகல ரத்நாயக்க வலியுறுத்தினார்.

நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, உலக வங்கியின் சிரேஷ்ட பொருளாதார நிபுணர் ரிச்சர்ட் வோக்கர் (Richard Walker) உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவொன்று இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றியதுடன், உலக வங்கியின் பிரதிநிதிகள் குழுவொன்றும் இணையவழி தொழில்நுட்பத்தின் ஊடாக இணைந்துகொண்டது.

## கடவுச்சீட்டு தயாரித்து தருவதாகக் கூறி பண மோசடி




கடவுச்சீட்டு தயாரித்து தருவதாக கூறி பணத்தை மோசடி செய்த இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒரு நாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டு தயாரித்து தருவதாக கூறி தேசிய அடையாள அட்டைகள் மற்றும் ஆவணங்கள் பெற்று பண மோசடி செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. தலங்கம பொலிஸாருக்கு கிடைத்த 3 முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன்படி நேற்று (31) சந்தேக நபர்கள் தலங்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்களிடம் முறைப்பாடு செய்த இருவரின் தேசிய அடையாள அட்டைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. முறைப்பாடு ஒன்றுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் பொரலஸ்கமுவ பொலிஸாரால் நேற்று கைதுசெய்யப்பட்டதுடன், சந்தேகநபரிடம் இருந்து தேசிய அடையாள அட்டை, 15,000 ரூபா மற்றும் 9 போலி கடவுச்சீட்டில் தயாரிக்கப்பட்ட டோக்கன்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 47 மற்றும் 65 வயதுடைய மாலம்பே மற்றும் கொழும்பு 9 ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது. சந்தேக நபர்கள் இன்று (01) கடுவெல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

## இலங்கை வந்தடைந்த விக்டோரியா நூலண்ட்



அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் விக்டோரியா நூலண்ட் இலங்கையை வந்தடைந்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள விக்டோரியா நூலண்ட், அமெரிக்க - இலங்கை நட்புறவின் 75 வது ஆண்டு நிறைவு கொண்டாட்டங்களிலும் கலந்து கொள்வார்.

மேலும் இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும், மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், நல்லிணக்கத்தை மேம்படுத்தவும் இலங்கையின் முயற்சிகளுக்கு தொடர்ந்து அமெரிக்காவின் ஆதரவை விக்டோரியா நூலண்ட் உறுதி செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.